1972 டிசம்பர் 13]

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : நிதி வசதியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அவர்களாகவே முன்வந்து அவர்கள் செமி-பெர்மெனன்ட் தியேட்டர்கள் கட்டிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் குறிப்பிட்டது நகராட்சிமன்றங்கள் பற்றி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் பற்றித் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் துறை சீரமைப்பு.

* 143 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சமுதாய வளர்ச்சி பிளாக் நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் செய்து, அதிகாரிகளின் பொறுப்புக்களை பிரித்தமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம், எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் பற்றிய, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 3—8—1971 நாளிட்ட 1805 எண் அரசாணையின்படி* 9—2—1972–ஆம் நாளிட்ட 236 எண் அரசாணையின்படி, அவைகளுக்கு வெளியிடப்பட்ட திருத்தங்களுடன், பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது சமுதாய அமைப்பிற்கும், ரெவின்யூ அமைப்பிற்கும் தொடர்பு இல்லாத, முறையில் இப்போது ஆர்.டி.ஓ. போன்றவர்கள் சமுதாய வளர்ச்சி அமைப்பு போன்றவற்றையும் கவனித்து வருகின்றதை மாற்றி, சமுதாய வளர்ச்சிக்கென தனியாக அலுவலர்களை நியமிக்க அரசு யோசனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் வருவாய்த் துறை பிரிவிற்கும், சமுதாய வளர்ச்சித் துறை பிரிவிற்கும் எந்த முறையில் நிர்வாக

*170–191-ம் பக்கங்களில் இணைப்பு—1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS — வாய்மையே வெல்லும்

அமைப்பை மாற்றியமைக்கலாம் என்பதை ஆராயும்படி நிர்வாக சிரமைப்புக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய அறிக்கை விரைவாக கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கிருேம். அதனுடைய அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன், அரசு அதை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளே எடுக்கும்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சித் துறையில் உள்ள ஒன்றியங்களேச் சீரமைக்கும் நிலையில், இப்போது இருக்கும் ஒன்றியங்களில் சிலவற்றில் 60–70 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சிலவற்றில் 10–15 பஞ்சாயத்துக்கள்தான் இருக்கின்றன, இவைகள் எப்படி இப்படி பிரிக்கப்பட்டன என்பது சந்தேகமாக இருக்கின்றது—ஒரு திட்டவட்டமான முடிவு எடுத்து எல்லா ஒன்றியங்களேயும், ரெவின்யூ வட்டங்கள் ஒரே நிலையில் இருப்பது போல் —40 பஞ்சாயத்துகள் இருக்கும் ஒன்றியங்களாக மாற்ற வேண்டுமென்று ஏதாவது சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றியும் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் இது குறித்தும் ஆராயும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்கள். அவர்களின் அறிக்கை கிடைத்த பிறகு, அதன் மீது அரசு ஆராய்ந்து தக்க முடிவினே எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மக்கள் தொகை பெருக்கத்தை முன்னிட்டும், மத்திய அரசின் உதவியைக் கூடுதலாகப் பெறும் பொருட்டும், தற்போதுள்ள ஒன்றியங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மத்திய அரசு ஏற்கனவே ஒரு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியங்களுக்கும் நிதி உதவி செய்து வந்திருக்கிருர்கள். எக்காரணத்தைக் கொண்டும், அதன் எண்ணிக்கையை அதிகமாக்கக் கூடாது என்ற உத்தரவாதத்தின் பேரில்தான் நாம் நிதி உதவி பெற்று வருகிருேம். அதனுல் எண்ணிக்கையைப் பெருக்க முடியாமல் இருக்கிருேம். 1—2 ஆண்டுகளுக்குள் இந்த நிலை சரியாகிவிடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. நிர்வாக சீர் அமைப்புக் குழுவும் இது குறித்து ஆராயும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய கருத்து அரசுக்குக் கிடைத்த பிறகு அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.